Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா; 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

04 - 07 - 1992    சனிக்கிழமை    ஓசை 137

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    ஆனி 20

## நீரில் கலக்கப்படும் குளோரினினால் புற்றுநோய்

குடிநீரைச் சுத்தப்படுத்துவதற்காக உபயோகிக்கும் குளோரின் என்னும் இரசாயனப் பொருள் தண்ணீருடன் கலக்கப்படும்போது ஏற்படும் இரசாயன மாற்றங்களினால் வரும் உப விளைவுகள் புற்றுநோய் தோன்றுவதற்கு காரணமாகின்றன என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்து உள்ளனர். புற்றுநோயினால் பீடிக்கப்படுபவர்களில் சுமார் இருபத்தேழு சதவிகிதமானவர்கள் (வருடாந்தம்) இக்காரணங்களினால் புற்றுநோய் தோன்றுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குளோரின் கலந்த குடிநீர் பாவனைக்கு எடுப்பது புற்றுநோய் தோன்றுவதற்குப் பிரதான காரணம் ஆகும் என்று டாக்டர் றோபட் மொறிஸ் தலைமையிலான விஞ்ஞானிகள் குழு முடிவு செய்துள்ளது.

### மண்டலாய் பகுதியில் புதிய போர் முனை

# ராணுவத்தை எதிர்த்து புலிகள் கடும் சமர்

# படைக்கு பேரிழப்பு கவசவாகனம் நாசம்

## 75 தமிழர் பொலிசாரால் நீர்கொழும்பில் கைது

(கொழும்பு)

நீர்கொழும்பு பகுதியில் எழுபத்தைந்து தமிழர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பயங்கரவாத ஒழிப்பு விசேட அதிரடிப்படையினர் நீர்கொழும்புப்பகுதியில் வசித்த வடக்கு, கிழக்குப் பகுதியைச் சேர்ந்தவர்களில் பலரைக் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் பல பெண்களும் இடம்பெற்றுள்ளனர்.

## ஒந்தாச்சி மடத்தில் நான்கு தமிழர் கொலை

(மட்டக்களப்பு)

ஒந்தாச்சி மடத்தில் கடந்த புதன்று நான்கு அப்பாவித் தமிழ் பொதுமக்கள் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு ஒந்தாச்சி மடத்தில் இந்த நால்வரும் முன்னர் அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர் இவர்கள் நால்வரையும் சுட்டுக்கொன்ற அதிரடிப் படையினர் அவர்களின் சடலங்களை வீதியோரத்தில் வீசியிருந்தனர்.

## வடபகுதிப் பெண்மணியிடம் மருதானையில் பணம் தமிழ் இளைஞரால் சூறை

(கொழும்பு)    பெண்மணியையும் அவருடன்

## விமானங்கள் அகோர குண்டுவீச்சு

(யாழ்ப்பாணம்)

நேற்று, மண்டலாய் பகுதியை நோக்கி முன்னேற முயன்ற இரா ணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளின் படையணிகளுக்கும் மத்தியில் பல மணி நேரமாக தொடர்ந்து கடும் சண்டை நிகழ்ந்தது. வெற்றிலைக் கேணியிலிருந்து டாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் முன்னேற முய ன்ற பீரங்கி, காலாற்படை அணிகளைத் தடுத்துநிறுத்தி விடுதலைப் புலி வீரர்கள் நிகழ்த்திய வீராவேச சமரில் சிங்கள இராணுவம் தரப்பில் பல த்த உயிர்ச்சேதம ஏற்பட்டது. இச் சண்டையில் கவசவாகனம் ஒன்று புலி களின் எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காகி முற்றாக சேதமடைந் தது. இச் சமரில் 7 புலிகள் வீரச்சாவடைந்தனர்.

வெற்றிலைக்கேணி-கட்டைக்காடு-புலோலிவெளிப் பகுதியில் நான்கு நாட்கள் நடைபெற்ற சண்டையின் பின்னர் ஒருநாள் ஓய்ந்திருந்த சண்டை மீண்டும் ஆறாம்நாள் தீவிரமடைந்தது. வெற்றிலைக்கேணியில் இருந்து இராணுவம் மண்டலாய்ப் பகுதி நோக்கி முன்னேற முற்பட்டபோதே இம்மோதல் ஏற்பட்டது. பிற்பகல் ஆரம்பமான மோதல் இரவு வரை பலமணி நேரமாகத் தொடர்ந்து இடம்பெற்றது

இச் சண்டையின்போது சிறிலங்கா இராணுவம் விமானப்படை விமானங்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 200 படையினர் படுகாயம் பாதுகாப்பு அமைச்சு தகவல்

வெற்றிலைக்கேணியிலிருந்து கடந்த 28 ஆம் திகதி ஆரம்ப[...] பட்ட உயிரிழப்பு இதைவிட அதிகமென்றும் இராணுவம் [...] இழந்துள்ளதென்றும் களத்தில் இருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மாந்தீவு மோதலில் 4 புலிகள் வீரச்சாவு

02 07. 92 அன்று பூநகரிப் பகுதியிலுள்ள மாந்தீவில் இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் எம்மவர் நால்வர் வீரச்சாவு அடைந்தனர். இம்மோதலில் ஒரு இராணுவம் பலியாகியது

லெப்டினன்ட்சிவகாந் (சுப்பிரமணியம்நித்திய னந்தன் உடுத்துறை, வடக்கு தாளையடி.) லெப்டினன்ட் திருவருள் (தம்பையா கைலநாதன் வேரவில், பூநகரி ) 2ஆம் லெப்டினன்ட் கதிர்ச்செல்வன் (இமானுவேல் ஜேசுராசன் வலைப்பாடு பூநகரி) 2ஆம் லெப்டினன்ட் (அன்பழகன்) மறவன் (ஜெபராசிபரிவார்ந் பீரிஸ் றெனால்ட் வெற்றிலைக்கேணி யாழ்.) ஆகியோர் வீரச்சாவு அடைந்தவர்களாவர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கடற்புலிகளின் ஆதரவுடன் 20 வீடுகள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

கடற்புலிகளின் ஆதரவுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் அமைக்கப்பட்ட இருபது வீடுகள் இன்று காலை 10.00 மணிக்கு கடற்புலிகளின் தளபதி கங்கை அமரனால் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த வீடுகள் வீடற்ற இருபது குடும்பங்களுக்கு வழங்கப்படவிருக்கிறது.

## உடற்கல்வி ஆசிரியர் வடக்கு - கிழக்கு

(கொழும்பு)

வவுனியாவிலிருந்து கொழும்புக்கு ரயிலில் வந்த வடபகுதி பெண்மணி ஒருவர் மருதானையில் வைத்து கடந்த ஞாயிற்றுக் கிழமை இளைஞர்களிடம் பத்தாயிரம் ரூபாய் பணத்தையும், பதினையாயிரம் ரூபாய் பெறுமதியான நகைகளையும் இழந்துள்ளார்.

மருதானை ரயில நிலையத்தில் ரயில் நின்றபோது இப்பெண்மணியையும் அவருடன் வந்த சிறுவனையும் தமிழ் இளைஞர்கள் இருவர் விசாரணைக்கு வருமாறு அழைத்துச் சென்று பணத்தையும் பொருள்களையும் கொள்ளையடித்தனர் என்றும் பின்னர் அவர்கள் தப்பியோடிவிட்டனர் என்றும் அப்பெண்மணி கோட்டை பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளனர்.

வெற்றிலைக்கேணியிலிருந்து கடந்த 28 ஆம் திகதி ஆரம்பமாகிய ஓ பரேசன் பலவேகய நடவடிக்கையில் நான்கு நாட்களில் 37 படையினர் பலியாகியதாகவும் சுமார் 200 படையினர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் தாக்குதல் ஆரம்பித்த அன்று மூன்றாம் நாளன்றும் இராணுவத்திற்கு ஏற்பட்ட அதிகமென்றும் இராணுவம் பல கவசவாகனங்களையும் ...

... துல அருந்துவரும செய்திகள் தெரிவிக்கின்றன.

# 7 புலிகள் வீரச்சாவு

வெற்றிலைக் கேணியிலிருந்து நேற்று மணடலாய் கோயிலடியை நோக்கி முன்னேறிய இராணுவத்துடனான மோதலில் ஏழு விடுதலைப் புலிகள் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவு அடைந்த வீரவேங்கை 2 ஆம் லெப்டினன் பானுமதி (புஸ்பநாதன் தர்சினி சிறுபாணி இல 54/57 கச்சேரி நல்லூர் வீதி யாழ்ப்பாணம) வீரவேங்கை மருதவாணன் (உபேஸ் கந்தசாமி யணிமாறனை, திருஞானசம்பந்தர் வீதி திருகோணமலை), வீரவேங்கை கரன் (செல்வராஜா மருமகுமார் (பரமேஸ்வரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கு வெற்றிடங்கள் நிரப்பப்படா

(நமது நிருபர்)

விளையாட்டு மற்றும் உடற்கல்வி உதவி ஆசிரியர்கள் பதவிக்கு விண்ணப்பித்த வடக்கு விண்ணப்பதாரிகள் அனைவரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தது தெரிந்ததே. இதுபற்றிய விபரங்கள் அடங்கிய வர்த்தமானி தற்பொழுதுதே இங்கு வந்துள்ளது.

இதில் சிங்கள மொழிமூலம் நிரப்பப்பட்ட வேண்டிய மிக அவசரமான வெற்றிடங்கள் மட்டுமே நிரப்பப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அம்பாந்தோட்டை, பொலநறுவ, மாத்தளை, புத்தளம் மொனராகலை பதுளை, நுவரெலியா, திருமலை, அம்பாறை அனுராதபுரம் ஆகிய இடங்களுக்கான வெற்றிடங்களே நிரப்பப்படும் எனத் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளது.

இதனாலேயே வடக்கிலிருந்து விண்ணப்பித்த அனைவரது விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படவுள்ளது. (ச)

# 8 விமானப் படையினர் பலி: திருமலையில் புலிகள் அதிரடி

## 2 படையினரை காணவில்லை

(திருக்கோணமலை)

திருக்கோணமலை பன்குளம் வீதியில் நேற்று சிறிலங்கா விமானப்படை மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துணிகர தாக்குதலில் எட்டு விமானப்படையினர் பலியாகினர்.

நேற்று காலை 8 15 மணியளவில் பன்குளம் வீதியிலுள்ள 4ஆம் கண்டம் விமானப்படை முகாமிலிருந்து பன்மதவாச்சி இராணுவ முகாமிற்கு 30க்கு மேற்பட்ட விமானப்படையினர் வந்து கொண்டிருந்தனர்.

இவர்கள் அப்பகுதிக்கு வருவதற்கு முன்னர் இவர்களுக்கு காவலாக 4ஆம் கண்டம் முகாமிலிருந்தும்பன்மதவாச்சிமுகாமிலிருந்தும் காலை 7 00 மணி முதல் படையினர்அப்பகுதிக்கு வந்து காவற் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

காவற்கடமையில் ஈடுபட்டிருந்த இவ்விரு அணியினருக்கும் இடையில் 150 யார் இடைவெளி மட்டுமே இருந்தது இவ் இரு அணியினருக்கும் இடையில் வைத்தே ரோந்து வந்த அணியினர் மீது விடுதலைப் புலிகளினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலில் எட்டு இராணுவத்தினர் பலியாகியதாகவும் இருவரைக் காணவில்லை எனவும் மூவர் காயமடைந்தனர் எனவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

இவர்களிடமிருந்து ஆறு நவீனரக துப்பாக்கிகள் வெடிபொருட்கள், இராணுவ உபகரணங்கள் என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத் துணிகரத்தாக்குதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவு அடைந்தார்

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் நேற்று சிறிலங்கா விமானப்படையினர் மீது விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

★ ரி 81-1 ரக துப்பாக்கி - 05
★ ரி56 பட ரக துப்பாக்கி - 01
★ ரி 81 எல். எம் ஜி மகசின் - 01
★ ரி81 மாசி - 28
★ ரி 56 மகசின் - 02
★ ரவைகள் - 856
★ சிறுப்பு ஜே. ஆர். கைக்குண்டு - 03
★ பெரிய ஜே. ஆர். கைக்குண்டு - 04
★ ஏ. கே சோக்சர் - 6
★ தண்ணீர் கான் - 02
★ மழை கவச அங்கி - 03
★ சப்பாத்து - 04 சோடி
★ தொப்பி - 03
★ கிற்பாக் - 01

## வீரச்சாவு

### லெப். நீலவாணன்

திருக்கோணமலை மாவட்டத்தில் நேற்று சிறிலங்கா விமானப்படையினர் மீதுமேற்கொள்ளப்பட்ட துணிகரத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் நீலவாணன் (மோகனதாஸ்-பாலசுந்தரம் பாலச்சந்திரன். சாம்பல்தீவு திருமலை) என்னும் போராளிக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## ஒட்டி சுட்டானில் இரு மாணவிகள் காயம்

(ஒட்டி சுட்டான்)

ஒட்டிசுட்டான் மகாவித்தியாலய மாணவிகள் இருவர் வான் ஒன்றினால் மோதப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



### 2 ஆம் லெப். சேரன்

01-07-1992 அன்று வவுனியாவில் இடம்பெற்ற வெடிவிபத்தில் 2 ஆம் லெப்டினன்ட் சேரன் (சித்திரவேல் தட்சணாமூர்த்தி, 91. 2 ஆம் யுனிட், தர்மபுரம். உதயநகர்) என்னும் விடுதலைப் புலிகள் போராளி வீரச்சாவடைந்தார்

இவருக்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## அரசிற்கு எதிராக மனித சங்கிலிப் போராட்டம்

அரசாங்கத்திற்கு எதிராக அடுத்ததாக மனித சங்கிலி போராட்டத்தை நடத்தப் போவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம் பி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முதலாம் திகதிநடை பெற்ற இரைச்சல் ஓசை எழுப்பும் போராட்டம் பெரும் வெற்றிகரமாக அமைந்தது என்றும்.

அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்பதையே இது எடுத்துணர்த்துகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

## ராஜாளிய பத்திரிகை ஆசிரியர் மீது வழக்கு

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினரால் வெளிடப்பட்ட ராஜாளிய என்னும் பத்திரிகையின் ஆசிரியரான பிரேம் லான்திவல என்பவர் மீது சட்டமா அதிபர் திணைக்களம் வழக்குப் பதிவு செய்துள்ளது.

கறுப்பு பூனைகள் என்னும் கொலைப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட கொலைகள் தொடர்பாக செய்திகளைப் பிரசுரித்தமைக்காக பீனல் கோட் சட்டம் 120 இன் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது

## பௌத்த பீடாதிபதிகளுடன் சந்திப்பு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள தமிழ்க் கட்சிகள் முன்வைத்துள்ள நான் அம்சத் திட்டம் பற்றி அக்கட்சிகள் பௌத்த தேரர்களுடன் பேச்சுவார்த்தைகள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

**புதிய வகுப்புக்கள்**

*Yogi Home Science Accadamy Cake Iceing and Sugar Craft Classes (Wilton Method) and General Cookery* புதிய வகுப்புக்கள் 11-7-92 சனிக்கிழமை முதல் ஆரம்பமாக உள்ளது. உடன் தொடர்பு கொள்ளவும். 71B. நாயன் வீதி, கச்சேரி நல்லூர் றோட், நல்லூர். [2752]

**தேவை**

லோகிஸ், சேடி, பூவேலை நன்கு தெரிந்தவர்கள் உடன் தேவை.

''ஜெகா தையலகம்'
729, கே.கே.எஸ். வீதி.
(2757)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

**பதவி வெற்றிடம்**

பின்வரும் பதவிக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992-07-31-ம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதவி:

பொது சுகாதார பரிசோதகர் (ஒப்பந்த அடிப்படையில்)

சம்பளம்:

ரூபா 3,105/- (மாதமொன்றுக்கு நிலையானது)

தகைமை:

சுகாதார திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட பொது சுகாதார பரிசோதகர்களிற்கான பரீட்சையில் சித்தியெய்தி

---

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**பெரியதம்பி இரத்தினசிங்கம்**
[ஓய்வு பெற்ற கிராமசேவை உத்தியோகத்தர்]

அன்னை மடியில் 8. 11. 1935 — இறைவனடியில் 16. 7. 1991

திதி 04. 07. 1992

எங்கள் அன்புத் தெய்வமே!
பாசத்தின் உறைவிடமாய்த் திகழ்ந்த பாசவிளக்கே
எமக்கு வழிகாட்டியாய்த் திகழ்ந்த எங்கள் இதய தெய்வமே
ஆண்டொன்று சென்றாலும், உங்கள்
அருமை முகம் மறக்கவில்லை
உங்கள் ஆத்ம சாந்திக்காக அனுதினமும் பிரார்த்திக்கும்

நட்டாங்கண்டல்
மாங்குளம்

அன்பு மனைவி
பிள்ளைகள், மருமக்கள்
(2717)

---

வடமாகாண அரசாங்கஒப்பந்தக்காரர்சங்கம்

## அறிவித்தல்

வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கம் 1. 07 1992 முதல் 4/1, சம்பியன் வீதி, கொக்குவில் என்ற விலாசத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது இதை சகல சங்க அங்கத்தவர்கட்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மு. சி. சண்முகராசா
செயலாளர்
4/1, சம்பியன் வீதி, கொக்குவில்
[சி/4646]

---

யாழ்/ஜெய்ப்பூர்
செயற்கைக் கால் திட்டத்தின்

## 5வது ஆண்டுநிறைவு தினம்

மேற்படி வைபவம் 1992ஆம் ஆண்டு யூலை (July) மாதம் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் யாழ்/ஜெய்ப்பூர் செயற்கைக்கால் திட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

எமது நிலையத்தின் சேவைகளைப் பெற்ற அனைவரையும் மற்றும் ஆதரவாளர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்புகள் அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம்.

யாழ்/ஜெய்ப்பூர்திட்ட
நிர்வாகக் குழு
அலுவலக ஊழியர்கள்
(சி/4634)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரமலர்வு 12. 07. 1968 — வீரச்சாவு 15. 07. 1991

**கப்டன் மனோ**
கோணலிங்கம் ஸ்ரீதரன்
குச்சவெளி திருக்கோணமலை
திதி 04. 07. 1992

வீரனே . . . !
மரணம் வாழ்வின் முடிவல்ல என்றுரைத்தாய்
மானம் இன்றேல் இத்தேகம் எதற்கென்றாய்
தேசம் காக்க தீ என எழுந்தாய்
தீயாய் நின்று தீயுடன் சங்கமித்தாய்

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்
-உமது பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

கிரியை நிகழ்வில் உற்றார், உறவினர், சகபோராளிகள், நண்பர்கள், அனைவரும் கலந்துகொள்ளும்படி அழைக்கின்றோம்.

(2735)

---

## சிங்களப் படை சிதறிட செங்களமாடிய புலிவீரர்



மேஜர் குமரன்
(துரைசாமி - துரைசிங்கம்)
நெல்லிப்போடியார்கள்,



மேஜர் விடுதலை
(லம்பா)
(இராஜரட்ணம் ஆனந்தராசா)
கொக்குவில் மேற்கு,



லெப் கலையரசன்
(விஜயதீசன் கந்தப்பு சௌந்திரராஜன்
கறுப்பனை மன்னம்பிட்டி,



2-ம்லெப். மணிமாறன்
(சர்மா)
(வைத்தியநாத சர்மா - ரமணாந்தசர்மா)

---

## நினைவு கூருகின்றோம் . . .

**1992-07-04**

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்-கரவெட்டி மண்டான் பகுதியில் 'புளொட்' குழுவினர் மேற்கொண்ட குண்டுவெடிப்பு பரிசிலனையின் இடையில் எதிர்பாராதவிதமாகச் சிக்கியதில் எம்மைப்பிரிந்த நாட்டுப்பற்றாளரான -

**வினோத்** (மாணிக்கம் நவசீலசேகரம் - முதலைக்குழி, கரவெட்டி, யாழ்ப்பாணம்)

மன்னார் - உயிலங்குளம் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் காயமுற்று யாழ்-மருத்துவமனையில் சாவடைந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண்.

1987 ஆம் ஆண்டு நவிண்டிலில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**கரன்** (ஜெனாமூர்த்தி சயந்தன்-வல்வெட்டித்துறை)

**சேரன்**

1988 ஆம் ஆண்டு மணலாறு அளம்பில் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய-

**2 ஆம் லெப். ஆனந்தி** (காமாட்சியம்மாள் தர்மசெட்டியார் - கணேசபுரம், பரப்புக்கடந்தான், வட்டக்கண்டல், மன்னார்)

1989 ஆம் ஆண்டு வவுனியா கொந்தக்காரன்குளம் பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலின் போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

சோதகர்களிற்கான பரீட்சையில் சித்தியெய்தியிருப்பதுடன் தகுதி பெற்ற தினத்திலிருந்து ஆகக் குறைந்தது மூன்று வருட அநுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட பதவிக்கான விண்ணப்பப்படிவங்களும், இதர விபரங்களும் சிரேஸ்ட உதவிப் பதிவாளர் / தாபனக்கிளை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களைப் பெற விரும்புவோர் சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23X10 ச. மீற்றர் அளவுடைய தபால் உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் ஆகியவற்றைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும், விவரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்காத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்,
1992.07.01

(சி/4645)

(துரைசாமி - துரைசிங்கம்)
நெல்லிப்போடியார்கள்,
மட்டக்களப்பு


ஆனந்தராசா)
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

சௌந்தரராஜன்
கறுப்பளை மன்னம்பிட்டி,
மட்டக்களப்பு

(வைத்தியநாத சர்மா - ரமணாந்தசர்மா)
மாவிட்டபுரம்



2-ம் லெப். காளிதாஸ்
(கமலதாசன் விக்கினேஸ்வரன்)
இரண்டாம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை



வீரவேங்கை
தமிழரசன்
(குலசிங்கம் குணாளன்)
நீதிமன்ற வீதி, பருத்தித்துறை



வீரவேங்கை
பிரனயன் (பிலிப்ஸ்)
(அருளப்பு டிக்கொன்)
மண்டைதீவு



வீரவேங்கை
வசந்தன் (வசி)
(கந்தையாலோகேஸ்வரன்)
சுழிபுரம் மத்தி, சுழிபுரம்



2 ஆம் லெப்.
கூத்தரசன்
(குபேரன் - பாலசுப்பிரமணியம் கிரிதரன்)
காளிகோயிலடி சங்கானை



வீரவேங்கை
இசைவாணன்
(கீதன் - நடராசா விஸ்வராசா)
சென்றல்காம், அம்பாறை



வீரவேங்கை
சோலைவண்ணன
(விசுவீரசாமி சுதாகரன்)
சனகர் தோட்டம்
காமிகேசன்துறை



வீரவேங்கை
மறைச்செல்வன்
(அமிர்தன் - குமாரவேல் பெனிலோ)
இல12, ரி.சி.லேன் மானிப்பாய்

கட்டைக்காடு புல்லாவெளிப் பகுதியில் கடந்த 30 ஆம் திகதி முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான உக்கிரமோதலில் பத்தொன்பதுக்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இராணுவத்தினரை தடுத்து நிறுத்தி விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடத்தினர். இத் தாக்குதலில் பன்னிரண்டு வேங்கைகள் வீரச்சாவடைந்தனர்.

போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

**லெப். செந்தூரன்** (வடிவேலு லோகநாதன் - யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி - பன்னங்கண்டி தமிழ்க்கலவன் பாடசாலை மீது இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொலலப்பட்ட ஆசிரியர்.

மாவிட்டபுரத்தில் தேசவிரோத சக்திகளினால் அடித்துக்கொலலப்பட்ட தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவன்.

1990 ஆம் ஆண்டு பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**வரதன்** (வேலாயுதம் மதியழகன் - 3 ஆம் கட்டை, தம்பலகமம், திருக்கோணமலை)

மன்னார் - முருங்கன் பகுதியில், எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எம்மைப்பிரிந்த -

**அமல்ராஜ்** (அன்ரன் நேபேட் (தம்பி) - வேளாங்கண்ணிவீதி, சவற்காடு. மன்னார்)

ஆனையிறவில். சிறிலங்காப்படையின் மிதிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய -

**கந்தசாமிபாலா** (கள்ளிப்பிட்டி, கண்டாவளை, பரந்தன், கிளிநொச்சி)

தமிழீழக்கடற்பரப்பில், சிறிலங்கா கடற்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப் ஜிங்ரோ** (யாழ்ப்பாணம்)

அம்பாறை. கோமாரி, இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல்போன பொத்துவிலைச் சேர்ந்த 7 தமிழர்கள்.

மணலாறு, கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் இடம்பெயர்ந்தோர் தங்கியிருந்த பாடசாலை, தேவாலயம் ஆகியவற்றின் மீது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்.

மன்னார் - தள்ளாடி முகாமிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 6 - தமிழர்கள்

காரைநகரில், சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட தாய், மகள் ஆகிய இரண்டு தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலின் போது, விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

**பிரசாத்** (பாலிப்போடி மகேந்திரன் - சித்தாண்டி, மட்டக்களப்பு,

வவுனியாவில், சிறிலங்கா இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டபின் அவர்களது கண்காணிப்பிலுள்ள சுந்தபுரம் பகுதியில் வீதி ஓரத்தில் அழுகிய நிலையில் சடலங்களாகக் காணப்பட்ட 2- தமிழர்கள்.

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4644)

## சிந்தனைக்கு

சிரான மக்களும், சிரான நாடுகளும் இன்றையப் பொழுதில் செயலாற்றி, நாளைய பொழுதை நம்பிக்கையுடன் நாடுவர்.

— ஜவஹர்லால் நேரு.

# ஈழநாதம்

81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 04-07-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் 95

## 'இந்து'விற்கு இன்னும் தெளிவு பிறக்கவில்லை

"சிறிலங்கா அரசாங்கம் இரட்டைத் தன்மையான ஓர் விளையாட்டை நடத்துகின்றது இந்தியாவிலிருந்து இரண்டு பொலிஸ் குழுக்களை இலங்கைக்குள் வர அனுமதித்ததன் மூலம், சிங்களவர்களைத் திருப்திப்படுத்தலாம் என எண்ணுகின்றது. இந்திய சட்ட ஆலோசகர்கள் குழுவை அனுமதிக்க மறுத்ததின் மூலம் புலிகளைச் சாந்தப்படுத்த முயற்சிக்கின்றது" இவ்வாறு கொழும்பிலுள்ள அரசியல் அவதானிகள் கருதுவதாக 'இந்துப் பத்திரிகை' தெரிவித்துள்ளது.

இந்துப் பத்திரிகையில் வெளியாகியுள்ள இச்செய்தியானது, கொழும்பிலுள்ள அரசியல் அவதானிகளின் கருத்து என்பதைவிட இந்துப் பத்திரிகையின் கருத்து என்றுகூறுவதே பொருந்தும் அவ்வாறு இல்லாவிடிலும், இந்திய ஆதரவாளர்களின் நிதர்சன நிலைக்கு அப்பாற்பட்ட கருத்தாகவே இருக்கும்.

சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினை தொடர்பாகவோ அன்றி இந்தியாவுடனான வெளியுறவுக் கொள்கை தொடர்பாகவோ இரட்டைத் தன்மையான கொள்கை எதையும் கொண்டிருக்கவில்லை. இனப்பிரச்சினையில்,இராணுவத்தீர்வு என்பதே சிறிலங்கா அரசாங்கத்தின் முடிந்த முடிவு. இதேவேளை இந்தியாவை நண்பனாக ஏற்றுக்கொள்ளாத, இந்தியாவின் எதிரிகளுடன் நட்பைப் பேணும் விரோதப் போக்கே சிறிலங்காவின் வெளியுறவுக் கொள்கையாகும் இவை இரண்டும் சிறிலங்காவின் இராஜதந்திர அடிப்படை. பலவீனமான, சிறியநாடாக இருப்பதினால், இதில், தேவைக்கேற்ப இராஜதந்திர நடவடிக்கைகளை சாதித்திற்கும் இடத்திற்கும் ஏற்பச் சிறிலங்கா கடைப்பிடித்துவருகின்றது. இதில், புலிகளைத் திருப்திப்படுத்தவோ அன்றி, இந்தியாவைத் திருப்திப் படுத்தவோ, எதுவுமில்லை ஆனால், சிங்களப் பேரினவாதிகளைத் திருப்திப்படுத்துவதே பிரேமாவின் ஒரே நோக்கமாகும் இதில் இன்றைய பிரேமதாசா அரசாங்கம் மட்டுமல்ல, கடந்த காலத்தில் இருந்த சகல சிங்கள அர

### ஓர் இனமென்ற தன்மையை இழந்து வருவதாக

# அமெரிக்க கறுப்பர்கள் மத்தியில் உருவாகி வரும் பேரச்சம்

கறுப்பின அமெரிக்கர்களின் எதிர்கால நம்பிக்கை குறையும் போது அச்சங்களும் சந்தேகங்களும் தோன்றுகின்றன.

அமெரிக்காவின் வாழ்க்கை இறப்பு பற்றிய புள்ளிவிபரங்களை நோக்குவோம்.

அமெரிக்காவிலேவாழ்கின்ற ஆபிரிக்க - அமெரிக்க இனத்தவர் மத்தியில் 1000 (ஆயிரம்) பிறப்புக்களுக்கு 17.7 வீதமான இறப்புஎன்று கணிக்கப்பட்டுள்ளது. சராசரி வெள்ளை இனத்தவர்களின் இறப்பு விகிதத்தோடு ஒப்பிடும் போது இது இரண்டு மடங்காகும். மலேசியாவில் உள்ள இறப்பு விகிதத்திலும் பார்க்க இது கூடுதலாகும்.

பெற்றோர்கள் ஒருவரோடு மட்டும் வாழுகின்ற ஆபிரிக்க-அமெரிக்கர்களின் குழந்தைகளின் எண்ணிக்கை அவ்வாறு வாழுகின்ற வெள்ளை இனக் குழந்தைகளையும் பார்க்க 3 மடங்காகும். 43 2 வீதம் ஆபிரிக்க - அமெரிக்கக் குழந்தைகள் வறுமைக் கோட்டின் கீழ் வாழுபவர்களாவர்.

அமெரிக்காவில் எய்ட்ஸ் என்னும் பயங்கர நோயால் பீடிக்கப்பட்டிருப்பவர்களும் 28 8 வீதத்தினர் ஆபிரிக்க அமெரிக்கர்களாவர். அவ்வாறு எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட அந்த இனத்தவருள் 52 வீதத்தினர் பெண்களாவர் மகப்பேற்றின் போதே இந்தக் கொடிய நோயால் பாதிக்கப்பட்ட அமெரிக்கக் குழந்தைகளும் 53 வீதத்தினர் கறுப்பினக் குழந்தைகளாவர்.

15 வயதுக்கும் 34 வயதுக்கும் இடைப்பட்ட ஆபிரிக்க அமெரிக்க ஆண்களின் இறப்புக்கு முக்கிய காரணம் இப்போது கொலையாகவே இருக்கின்றது அமெரிக்க நாட்டில் கொலை செய்யப்படுபவர்களின் அரைவாசிப் பங்கினர் கறுப்பினத்தவரே.

1989 ஆம் ஆண்டில் 20 வயதுக்கும் 29 வயதுக்கும இடைப்பட்ட ஆபிரிக்க அமெரிக்கர்களுள் 23 வீதத்தினர் சிறையில அல்லது நன்நடத்தைப் பணியில் அல்லது சட்டபூர்வ கண்காணிப்புக்கு உட்பட வேண்டிய நிலையிலிருந்தனர். ஒரு ஆய்வின்படி பதினைந்து வயதுக்கும் முப்பத்திநாலு வயதுக்கும் இடைப்பட்ட கறுப்பின ஆண்களுள் 1/5 பங்கினர் குற்றவியல் பட்டியலில் பெயர் பதிக்கப்பட்டோர்

தெரிந்தோ தெரியாமலோ இந்த இயக்கங்கள் கறுப்பின மக்கள் மத்தியிலே சமூக நெருக்கடி ஒன்று உருவாகி அவர்களை நிலைகுலையச் செய்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது இந்த நெருக்கடி ஆபிரிக்க அமெரிக்க ஆண், பெண், குழந்தைகளை மட்டுமல்ல முழுநாட்டையுமே பீடித்துள்ள பிரச்சனையாகும். வறுமை, குற்றவியல், போதைவஸ்துக்கள், குடும்ப சமுதாயச் சிதைவுகள் என்பனவே இந்த நெருக்கடிக்கான காரணங்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்திருப்பதோடு அதனுடைய கொடுந்தன்மை சந்தேகத்துக்கு அப்பாற்பட்டதாகும். இந்தப் பல்வின நெருக்கடி தொடர்பான கறுப்பின மக்களின் அச்சம் நாளாந்தம் வளர்ந்து கொண்டே வருகின்றது. 1991 ஆம் ஆண்டு 'நியூஸ் வீக்' பத்திரிகையின் கணிப்பீட்டின்படி கடந்த பத்து ஆண்டுகளில் கறுப்பின மக்களின் வாழ்க்கை கீழ்நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றது எனக்கொள்வோரின் விகிதாசாரம் 35 இல் இருந்து 51ஆக உயர்ந்துள்ளது 1960களிலிருந்து பார்க்கும் பொழுது கறுப்பின மக்கள் இன்று மிகக் கீழ் நிலையை அடைந்திருக்கிறார்கள் என்று ஆபேட் வைத்திய கல்லூரியைச் சேர்ந்த உளவியல் இணைப் பேராசிரியர் கலாநிதி அல்வின் போசன்ட் கூறியுள்ளார். 'எதிர்காலத்தைப் பற்றி எந்தக் கறுப்பினக் குழந்தையிடம் வினாவினாலும் 'அடுத்த ஆண்டு இந்தக்காலம் வரை நான் உயி

வேனாக' எனக்கூறுவதைப் பார்க்கலாம். இது பயங்கரமானதாகப் போய்க் கொண்டிருக்கிறது என எண்ணுகின்றேன்.

நியூஸ் வீக் பத்திரிகை பல ஆபிரிக்க அமெரிக்க புத்திஜீவிகளையும் குடியியல் செயற்பாட்டாளர்களையும் தெரிவு செய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகளையும் செவ்வி, கண்டதில் போசேனுடைய இருள் மிக்க அந்தக் கணிப்பீடு சரியானது என்றே கருத்துத்தெரிவிக்கப்பட்டது நகரப்புற வாசிகளைப் பாதிக்கும் குற்றவியல் சமூகப் பிரச்சினைகள் ஆபிரிக்க — அமெரிக்கர்களை வெகுவாக பீடித்திருக்கின்றது என்று வில்லியம் ராஸ்வெக என்ற வோஷிங்டன் போஸ்ற் பத்திரிகையாளர் தெரிவிக்கின்றார்கள். கறுப்பின அமெரிக்கர்கள் ஒரு இனமாக வாழ்வதே கேள்விககுரியதாகி விட்டது என்பதே ஜாஸ்வெரியின் கருத்தாகும் இளைஞர்களைக்கொண்ட குறிப்பாக ஆண்களைக் கொண்ட ஒரே பரம்பரையையே இழந்து கொண்டிருக்கிறோம் இது எமது சமூகத்திற்கு பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறுகின்றார். எமது பிள்ளைகளை இழந்து நாங்கள் ஒரு மக்கட்சமுதாயமாக வாழமுடியுமோ என்று தெரியவில்லை என்றும் திரு. ராஸ்வெரி குறிப்பிடுகின்றார் வேறுபல கறுப்பினத் தலைவர்களின் அபிப்பிராயத்தோடு ஒப்பு நோக்கும்போது ராஸ்வெரியின் கருத்து தீவிரமானதாகவே தோற்றமளிக்கின்றது. புளோரிடா மவின்

> நகரங்களிலே உள்ள குற்றவியல் சமூகப்பிரச்சினைகள் அனைத்தும் ஆபிரிக்க. அமெரிக்கர்களை பூண்டோடு அழிக்க வேண்டும் என்ற இனவாத சதித் திட்டத்தின் பலன்தான் என மாணவர்கள் நம்புகின்றனர். மயக்கத்தை ஏற்படுத்தும் கொக்கேன் போதை வஸ்து, பயங்கர ஆயுதங்கள், நகரத்திலுள்ள கறுப்பின மக்களிடையே தோன்றிய எயிட்ஸ் கிருமிகள் அனைத்தும் இந்தச் சதித் திட்டத்தின் ஒரு பகுதியென்றும் தெரிவிக்கப் படுகிறது.

வரலாற்றாசிரியர் கெனத் கோயிங்ஸ்" நடக்கின்ற நிகழ்ச்சிகளைப்பார்த்து அதிர்ச்சியடையாத அறிவாளிகள் எவருமே கிடையாது' என்று கூறுகிறார்.

அமெரிக்காவின் இன உறவுகள் பற்றிய நீண்ட கசப்பான வரலாற்றினை உற்றுநோக்கும்போது ஆபிரிக்க அமெரிக்கர்களுக்கு அந்த நாட்டு வாழ்க்கையிலே புரை ஓடப்படுவதை தவிர்க்க முடியாது என்பது புலப்படும். அமெரிக்காவிலே வாழுகின்ற இளைஞர்களின்,சுதந்திரமாக மிதக்கும் ஆத்திரம்' 'நாங்கள் மரணிப்பதைப்பார்க்க விரும்பும்' வெள்ளையர்கள் பற்றிய சந்தேகத்தை வலுப்படுத்துகின்றது. எனவும் போசென்ட் குறிப்பிடுகின்றார். நகரங்களிலே உள்ள குற்றவியல் சமூகப்பிரச்சினைகள் அனைத்தும் ஆபிரிக்க அமெரிக்கர்களை பூண்டோடு அழிக்கவேண்டும் என்ற இனவாத சதித்திட்டத்தின் பலன்தான் என்று தனது மாணவர்கள் நம்புவதாக கோயிங்ஸ் கூறுகின்றார். மயக்கத்தை ஏற்படுத்தும் கொக்கேன் என்ற போதைவஸ்து கண்டுபிடிப்பு மிக இலகுவாக கைக்கெட்டும் பயங்கர ஆயுதங்கள். நகரத்திலுள்ள கறுப்பின மக்களிடையே தோன்றிய எயிட்ஸ் கிருமிகள் அனைத்தும் இந்தச் சதித்திட்டத்தின் ஒருபகுதியே எனக்கூறலாம். சன்ஸ்பிறன்ஸிஸ்கோவிலுள்ள கிளைட் ஐக்கிய மெத்தடிஸ்த தேவாலயத்தைச் சேர்ந்த வணக்கத்திற்குரிய சிசில் வில்லியம்ஸ் இதனை '1990 முறையிலான இனப்படுகொலை' எனவர்ணித்துள்ளார். ஒரு குறிப்பிட்ட நபரையோ அல்லது குழுவையோ நாங்கள் விரல்காட்டி குற்றஞ் சாட்டிவிடமுடியாது. ஆனால் அமெரிக்கசமூகத்திலுள்ளகறுப்பின மக்களும்முடிந்தளவுஎண்ணிக்கையினைமயக்கி அழித்துவிட ஒரு சதித்திட்டம் உருவாக்கி இருக்கின்றது என்பதில் எம்முள் பலருக்கு சந்தேகமே இல்லை, என்று சிசில் வில்லியம்ஸ் கூறுகிறார்.

எந்தவொரு பேராசிரியரோ அரசியலாளரோ அல்லது குடியியல் செயற்பாட்டாளரோ, நியூஸ் வீக்குப் பத்திரிகையின் நிருபர்கள் செவ்வி கண்டபோது 'இனப்படுகொலை' என்ற பதத்தை நேரடியாக பிரயோகிக்கவில்லை. நியூஸ் வீக்குப் பத்திரிகையின் வாக்கெடுப்பு காட்டுகின்றபடி வயது வந்த கறுப்பின மக்கள் குறைந்த விழுக்காட்டினரே போதை வஸ்து, எய்ட்ஸ் என்பன இனவாத சதித்திட்டத்தின் பயனாக எழுந்தது என நம்புகிறார்கள். அதே வேளை "கலுப்" அமைப்பின் மதிப்பாய்வின் குறைந்த விழுக்காட்டினர் பற்றிய இந்தக் கணிப்பீடு தவறானது என்றும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் இந்தச் சதி பற்றிய யோசனை உண்மைதான் என கறுப்பு அமெரிக்கர்களின் தேசிய மாதிரி எண்ணிக்கைகளில் 40 வீதம் என நம்புகிறார்கள் எனவும் கூறுகிறது. விடய மறிந்த, சிந்திக்கும் ஆற்றலுள்ள பல ஆபிரிக்க—அமெரிக்கர்கள் நகரத்தில் நிலவும் பல சமூக சீர்கேடுகளுக்கு, நிலையான இனவாத சமூகப் பாராமுகமே காரணம் எனக் கணிப்பீடு செய்கிறார்கள்.

"கறுப்பு இனமக்களை நெரிக்கப் போகிறோம் என்று சொல்வதற்கு ஒரு அறையிலே ஐந்துபேர் கூடியிருக்க வேண்டியதில்லை 60 வீதமான ஆபிரிக்க—அமெரிக்க இன மக்கள் நகர்ப்புறங்களிலேயே வாழ்கிறார்கள் என்பதால், நகரங்கள் உங்கள் பட்டியலிலே இறுதியாக இடம் பெறுமானால் ஆபிரிக்க—அமெரிக்கர்களை உங்கள் இலக்காக்கி விட்டீர்கள்" என்று சன்பிரான்சிஸ்கோவில் வசிக்கும் பொருளியலாளரும் எழுத்தாளருமான கலாநிதி ஜூலியன் மல்லியோக்ஸ்கூறுகிறார்.

இது வேண்டுமென்றே செய்யப்படும் அவமரியாதையாகும் இதைத் திட்டமிட்ட சதி என்று கூற நான் விரும்பவில்லை. ஆனால் இந்த உதாசீனம் இரக்கமுள்ள செயற்பாடல்ல!

(தொடரும்)

மாகும் இதில் இன்றைய பிரேமதாசா அரசாங்கம் மட்டு மல்ல, கடந்த காலத்தில் இருந்த சகல சிங்கள அர சாங்கங்களுமே இதைத்தான் செய்து வருகின்றன.

இந்நிலையில், புலிகளைத் திருப்திப் படுத்துவதற் காக சிறிலங்கா அரசாங்கம் முயலுகின்றது என்ற 'இந்து' வின் சாடலானது கடந்த காலத்தில் சிறிலங்கா தொடர்பாக இந்து பத்திரிகை கொண்டுள்ள தவறான கணிப்பீட்டைப் போன்றதொன்றே

கடந்த காலத்தில் சிறிலங்கா தொடர்பான விவ காரமாயினும் சரி புலிகள் தொடர்பான விவகாரமா னாலும் சரி இந்தியாவின் கொள்கையில் இந்துப் பத் திரிகையும். அதனுடன் தொடர்புடையவர்களும் வகித்த பங்கு முக்கியமானதான தென்றாகும் குறிப்பாக இந்திய - சிறிலங்கா சமாதான உடன்படிக்கையில் இந் துப் பத்திரிகையும், அதன் இணை ஆசிரியரான ராமும் வகித்த பங்கு முக்கியமானதாகும் இதேபோன்று இந்தி யாவில் விடுதலைப்புலிகளுக்கு விதிக்கப்பட்ட தடையில் கணிசமான பங்கு இந்துப்பத்திரிகைக்கும் உண்டு.

ஆனால், இந்துப்பத்திரிகையின் பங்கும் வழி காட் டலும் இந்திய இராஜதந்திரத்திற்கு வெற்றி எதையும் தேடிக்கொடுக்கவில்லை பெரும் அவமானகரமான இராஜ தந்திரத் தோல்விகளையும் இராணுவத் தோல்வி களையுமே தேடிக் கொடுத்ததோடு எதிரான அரசி யல் இராஜதந்திர நடவடிக்கைகளுக்கு பெரும் முட் டுக்கட்டையையுமே ஏற்படுத்தியுள்ளன இந்தவரிசை யிலேயே தற்பொழுது புலிகள் தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் ஒரு இரட்டைத் தன்மையான கொள்கை யைக் கடைப்பிடிப்பதாகக் காட்ட இந்துப்பத்திரிகை முனைந்துள்ளது. ஆனால், உண்மையில் இந்தியாவி னது அரசியல் இராஜதந்திர அழுத்தம் ஏற்படுவதைத் தவிர்ப்பதே சிறிலங்கா அரசாங்கத்தின் இராஜதந்திர நடவடிக்கை ஆகும். சிறிலங்காவின் தரப்பில் இருந்து திறம்பட மேற்கொள்ளப்பட்ட ஒரு இராஜதந்திர நடவடிக்கை இது என்றும் கூறலாம்.

இவற்றை நோக்கும் போது கடந்த காலத்தைப் போன்றே, இவ்விடயத்திலும் இந்திய இராஜதந்திரி கள் இந்துவின் வழிகாட்டலில் தவறாக கணிப்பீடு செய்ததுள்ளது போன்றே தெரிகின்றது. இதனை நோக்கும் போது, சிறிலங்காவின் ஒய்வு பெற்ற இராஜ தந்திரிகளில் ஒருவரான ஸ்ரான்லி ஜயவீர இந்தியத் தூதுவரான என்.எம் ஜாவிற்கு தலை இருக்கின்றதா? என எழுப்பிய கேள்வி, இந்தியாவிலுள்ள அநேக இராஜ தந்திரிகளுக்கும் பொருத்தமானதா என எண்ணத் தோன்றுகின்றது.

சிறுப்பின் ஆண்களுள் 175 பேரின் குற்றவியல் பட்டியலில் பெயர் பதிக்கப்பட்டோர் ஆவர்.

வகை குழந்தையிடம் வினா வினாலும்' அடுத்த ஆண்டு இத் தக்காலம் வரை நான் உயி ரோடு இருப்பேன் என்று நம்பு

றாஸ்வெரியின் கருத்து தீவிர மானதாகவே தோற்றமளிக் கின்றது. புளோரிடா மவின் அட்டபாண்டிக் பல்கலைக்கழக

டம் உருவாகி இருக்கின்றது என்பதில் எம்முள் பலருக்கு சந்தேகமே இல்லை என்று

சீனம் இரக்கமுள்ள செயற் பாடல்ல!

(தொடரும்)

# அணு ஆயுத சாதனங்கள் குறைப்பு வாக்குறுதி நிறை வேற்றப்பட்டது

— ஜோர்ஜ் புஷ்

[வாஷிங்டன்]

அமெரிக்க அணு ஆயுத படைச் சாதனங்களின் எண் ணிக்கையை கணிசமான அள வில் குறைக்கப் போவதாய் கடந்த செப்டம்பரில் அளிக் கப்பட்ட வாக்குறுதி நிறை வேற்றப்பட்டு விட்டதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் வாஷிங்டனில் வெளி யிட்ட அறிக்கை ஒன்றில் கூறி யுள்ளார்.

இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த நீர் மூழ்கிக் கப்பல் கள் மீது வைக்கப்பட்டிருக் கும் ட்ரைடன்ற் நீண்ட தொலைவு ஏவுகணைகள் மட் டும்தான் இப்போது கடலில் வைக்கப்பட்டிருக்கும் ஒரே பொரு அமெரிக்க அணு ஆயு தம் என்றும் அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டார்.

## 1995 ஆம் ஆண்டு வரை

## அணுவாயுத ஒப்பந்தத்தில் இந்தியா ஒப்பமிடாது

- நரசிம்மராவ்

(டில்லி)

அணுவாயுத பரவல் தடை ஒப்பந்தம் 1995 இல் மறு பரிசீலனை செய்யப்படும் வரை இந்தியா அவ்ஒப்பந்தத் தில் கை எழுத்திட மாட்டாது என்று இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் தெரிவித்தார்.

அண்மையில் புதுடில்லி யில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகை யில் தற்போதைய அணுஆயுத பரவல் தடுப்பு சட்டம் வல்லர சுகளுக்கு சார்பானதாக இருப் பதாகவும், குறிப்பிட்டார். அத்துடன் உலகின் எப்பாகத் திலும் எவரிடத்திலும் அணு ஆயுதம் இருக்கக்கூடாது என பதுவே இந்தியாவின் கருத் தாகும் என்றும் வலியுறுத்தி னார்

## தேர்தல் ஆருடம்

எதிர்வரும் நவம்பர் மாதத் தில் நடைபெறவிருக்கும் அமெ ரிக்க அதிபர் தேர்தலில் சுயே ட்சை வேட்பாளராகப்போட் டியிடும் பெரோஸ் பெரும் வெற்றியைப் பெறுவார்என்று சோதிடர்கள் சிலர் கணிப் பீடு செய்துள்ளனர் அண் மையில் அமெரிக்காவின் சிக் காக்கோ நகரை கூடிய சோதி டர்கள் கிரகங்களின் நிலையை ஆராய்ந்து இதனைக் கணிப் பிட்டிருப்பதாக கூறப்படுகின் றது.

## ரஷ்யாவுக்கு உதவியில்லை; ஜப்பானுக்கு புஷ் உறுதி

(வாஷிங்டன்)

ரஷ்யாவுக்கும், ஜப்பானுக் கும் இடையிலான நான்கு தீவு கள் பற்றிய விவகாரம் சுமுக மாகத் தீர்க்கப்படும் வரை ரஷ்யாவிற்கு பெரும் அளவி லான நிதியுதவி எதுவும் வழங் கப்படமாட்டாது என்று அமெரிக்காவின் வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கர் ஜப்பானிடம் உறுதி அளித் துள்ளார்.

தற்போது வாஷிங்டனுக்கு விஜயம் செய்துள்ள ஜப்பானிய பிரதமர் கிச்சி மியாஸோவாவை வரவேற்றுப் பேசிய வைபவத்திலேயே, இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா உட்பட முன்னாள் சோவியத் குடியரசுகள் அனைத்தும் சந்தைப் பொரு ளாதார அமைப்புக்கு மாறு வது தொடர்பாக ஜப்பான் கொண்டிருக்கும் நிலைப் பாட்டை ஆதரிப்பதாகக் கூறி யிருக்கும் ஜேம்ஸ் பேக்கர் மேலும், ரஷ்யாவுக்கும் ஜப் பானுக்கும் இடையிலான எல்லைத் தகராறு அடுத்து நடைபெறவிருக்கும் கைத் தொழில் மயநாடுகளின் மியூனிச்கூட்டத்தில் முக்கிய இடம் பெறவேண்டுமென்றும் ஜப்பானின் கோரிக்கைக்கும் ஆதரவு தெரிவித்தார்.

# அரசு ஓரங்குல நிலத்தையும் அந்நியருக்கு விற்காது

- பிரேமதாசா

(தனமல்விலை)

"எமது அரசாங்கம் வெளி நாட்டாருக்கு ஒரு அங்குல நிலத்தையும் விற்காது, விற்கும் எண்ணமும் எமக்கு இல்லை. இந்த நாட்டின் இறைமையை, ஒருமைப்பாட்டை எனது உயிர் போனாலும் வெளிநாட்டுச் சக்திகளுக்கு அடிமைப்படுத்த மாட்டேன்."

இவ்வாறு சிறிலங்கா ஜனாதி பதி ஆர். பிரேமதாசா தனமல் வில மத்திய மகா வித்தியால யத்தில் இடம் பெற்ற நிகழ்ச்சி யொன்றில் பேசும் போது குறிப்பிட்டார். தொடர்ந்து பேசிய அவர்;

கடந்த காலத்தில் இங்கு நிலைகொண்டிருந்த படையி னரை நான் மிகப் புத்திசாது ரியத்தால் அனுப்பி வைத் ததை மக்கள் அறிவார்கள். ஆனால் இன்று உண்மையை சிலர் விளங்கிக் கொள்வ தில்லை என்றும் குறிப்பிட் டார்.

# தமிழ் கவிதைத் துறையில் வெற்றி பெறும் புது மரபு

-சுரேஷ் கனகராசா

இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்பு தமிழில் எழுத் தறிவு மரபு தோன்றியிருப் பினும் தமிழ்க் கவிதை தனது வாய்மொழி மரபை மீறாம லேயே செவிப்புலக் கலையாக வளர்ந்துவந்துள்ளது எனினும் அச்சுயந்திர வருகையின் பின் கவிதையை ஒரு கட்புலக் கலையாகப் பார்க்கும் வழி தற்போது தோன்றியுள்ளது.

இவ்வாறு அண்மையில் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற சந்தனமேடை கவிதைநூல் வெளியீட்டு விழாவில் பல் கலைக்கழக ஆங்கிலத்துறைத் தலைவர் சுரேஷ் கனகராஜா குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பொ. பாலசுந் தரம் பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் திரு. சுரேஷ் கனகராஜா தொடர்ந்து உரையாற்றுகை யில்,

எழுத்தறிவும், வாய்மொழி மரபும் கலந்த ஒரு புதுவகை வடிவத்தில்தான் நவகவிதை அமையவேண்டும் அப்போது தான் கவிதை இருசாராருக் கும் எடுத்துச் செல்லலாம் என்கிறார்கள் மூன்றாம் உல கைச் சேர்ந்த கவிஞர்கள். அந்த வகையில் சண்முகலிங்கத் தின் கவிதைகளைப் பார்ப்போ மானால் இவ்விரண்டு தன்மை களையும் பெற்றதனைக்காண லாம் எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் கவிஞன் தனது கருத்தைவெளிப்படுத்த முனை கிறான் அவற்றுள் முரணணி களை காண வைக்கிறான், கவிதை முழுமையும் ஒரு லயத் தை பிடித்துள்ளது. பண்பாட் டுக் கோலங்களில் பெற்ற படி மங்களின் ஊடாக செவிப்புல னுக்கு விருந்திடுகிறான்என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்விழாவில் இ. முருகை யன், கலாநிதி பாலகிருஷ் ணன், கலாநிதி அ. சண்முக தாஸ் ஆகியோரும் உரையாற் றினர் விழாவின் ஆரம்பத்தி லும் முடிவிலும் நடன நிகழ்ச் சிகள் இடம் பெற்றன.

ஈழநாதம்

துன்புறுத்திப் பெறப்பட்ட

# வாக்குமூலம் ஏற்கக்கூடாது சின்னசாந்தன் மனுதாக்கல்

(சென்னை) பொலிசார் துன்புறுத்திப் பெற்ற வாக்குமூலத்தை ஏற்கக்கூடாது என்று கேட்டு சின்னசாந்தன் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். ராஜீவ்காந்தி கொலை வழக்கு தொடர்பாக சி.பி.ஐ யினரால் குற்றஞ்சாட்டப்பட்ட சின்னசாந்தனே "தன்னை பொலிசார் துன்புறுத்தி தனது விருப்பத்துக்கு மாறாக வாக்கு மூலம் பெற்று அனுப்பியிருக்கிறார்கள் என்றும் இதனை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளக் கூடாது" என்றும் கோரி நீதிமன்றத்தில் மனுஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

அவருடைய மனுவை சென்னை தனி செசன்ஸ் நீதிமன்ற நீதிபதி எஸ். எம். சித்திக் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டார். அவர் சி. பி. ஐ. பொலிசுக்கு கட்டளை அனுப்புமாறும் உத்தரவிட்டுள்ளார்.

## 45-ம் நாள் நினைவஞ்சலி

( 1992 - 07 - 04 )

மண்ணில்

1973 - 11 - 19



மண்ணிற்காய்

1992 - 05 - 21

### லெப். செங்கோன் - குணாளன்

( தங்கராசா சிவகுமார் )

1992-05-21 இல் மணலாற்றில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப்டினன்ட் செங்கோன் அவர்களுக்கும் அவருடன் அன்றைய தினம் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கப்டன் குட்டிமணி [மட்டக்களப்பு] அவர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்.

மாவீரர்களுக்காக..........

மலர்வொன்றிற்காய் கருகிப்போன
வாடமலர்களே !!
ஒளிர்விற்காய் உருகிப்போன
பெழுகுவர்த்திகளே !!
இனத்திற்காய் பிரிந்திருந்தீர்
உங்கள் உறவை
அதன் விடிவிற்காய்
இழந்தீர்கள் உங்கள் உயிரை
நிட்சயம் உங்கள் கனவுகள் நனவாகும்
தமிழீழம் மலரும்

குடும்பத்தினர்.
நண்பர்கள், உறவினர்,

திக்கம்.
( 2707 )

## பல்கலைக்கழகத்தில் 5நாடகங்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக கலை சபதி கலை அரங்கில் இன்று காலை 9 30 மணிக்கு ஐந்து நாடகங்கள் இடம் பெற உள்ளன. இந்த நிகழ்ச்சியை பல்கலைக்கழக ஆங்கில மன்றம் ஒழுங்கு செய்துள்ளது

## பௌத்த

நடாத்தவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில் அஸ்கிரிய, மல்வத்த பீடங்களின் தலைவர்கள் கலந்து கொள்ளலாம் என்றுஎதிர் பார்க்கப்படுகின்றது

## 7 புலிகள்

வாசிகசாலை. நீர்வேலி தெற்கு நீர்வேலி), வீரவேங்கை ராஜன் (கந்தையா சிறிசுதாகர், தாளையாடி. ஆழியவளை யாழ்ப்பாணம்), வீரவேங்கை செந்தில் (சின்னத்துரை சிறிபத்மராசா, வடமராட்சி கிழக்கு, சுன்னாகம்) வீரவேங்கை இயல்வாணன் கஸ்ரோ சோமசுந்தரம் கமலநாதன் வாரிவளவு, காரைநகர்). வீரவேங்கை கலைக்கொடி (அம்பிகாதேவி நடராஜா கோவில்தோட்டம் அல்வாய் தெற்கு)

ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## இராணுவத்தை

ங்கள். உலங்குவானூர்திகள், கடற்படைக் கப்பல்கள், டாங்கிகள், பீரங்கிகள் என்பவற்றைப் பயன்படுத்தி அகோர குண்டுவீச்சுத் தாக்குதலையும் எறிகணைத் தாக்குதல்களையும் நடத்தினர். இப்பகுதியில் இரவுபகல் வேறுபாடு இன்றி அகோரக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம் பெற்றவண்ணமுள்ளன.

யாழ். குடாநாட்டின் தென் கிழக்கு மூலையில் நடைபெறும் ஒப்பரேசன் பலவேகய II என்னும் இவ் இராணுவ நடவடிக்கையில் 4-வது கவசப்படைப் பிரிவு 6-வது ஏறிகணைப் பிரிவு 5-வது, 6-வது பட்டாலியன் பொறியியல் பிரிவுகள், 3-வது பட்டாலியன் சிக்னல் பிரிவு 1-வது பட்டாலியன் காலாட்படைப்பிரிவு, சிங்க ரெஜிமென்டின் 6-வது, 7-வது படைப்பிரிவுகள், கெமுனு ரெஜிமென்டின் 1-வது, 5-வது, 6-வது படைப் பிரிவுகள், கஜபாகு ரெஜிமென்டின் 1-வது 3-வது, 6-வது படைப்பிரிவுகள் மற்று விசேட அதிரடிப் படைப் பிரிவுகள் என்பன ஈடுபட்டுள்ளன.

தரை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இப்படையினருக்கு உதவியாக விமானப்படையினரும், கடற்படையினரும் செயற்பட்டுவருகின்றனர்.

வட பிராந்தியத்தின் இராணுவ பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவும் யாழ் பிராந்திய பிரிகேடியர் விஜயவிமலரட்ணாவும் வழி நடத்தி வருகின்றனர் என்றும். இராணுவத் தளபதி ஜெனரல் வைத்தியரட்ண, விமானப்படைத் தளபதி ஏயர்சீப் மார்ஷல் ரெறன்ஸ் குணவர்த்தனா, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளான்சி பெர்னாண்டோ ஆகியோரும் களத்தின் நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வழி காட்டி வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

## வீரச்சாவு

01-07-1992 அன்று புலோலி வெளியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் 2-ம் லெப்டினன்ட் கலைவாணன் (கென்றி - அருணாசலம் லவக்குமார், விளினையடி றோட் அம்பாறை), வீரவேங்கை சேனன் (தங்கராசா தங்கப்பதக்கம், சந்தையடி கண்டாவளை, கிளிநொச்சி), வீரவேங்கை அன்புமாறன் (அன்ரன் அருள்நேசன் நீர்வேலி யாழ்ப்பாணம்) ஆகிய விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்



## ஒட்டிசுட்டான்

பட்டு காயமடைந்ததாகவும் அவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியோடு அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது. பாடசாலையிலிருந்து வீடுநோக்கிச் சென்று கொண்டிருந்த போது இந்த விபத்து நேரிட்டதாகக்கூறப்படுகிறது

## மரம் வீழ்ந்து ஒருவர் மரணம்

(வவுனியா)

மடு அகதி முகாமில் வாழும் குடும்பஸ்தர் ஒருவரின் தலையில் மரம் முறிந்து விழுந்ததில் ஸ்தலத்திலேயே அவர் இறந்தார்.

மன்னார் அரிப்பு என்ற பகுதியைச் சேர்ந்த இவர் சமீபகாலமாக மடு அகதி முகாமில் வாழ்ந்து வருகிறார்.

பிரஸ்தாப நபர், கடந்த 30 ஆம் திகதி, குளத்தில் குளித்து விட்டு அகதி முகாமை நோக்கி வந்த போது திடீரென்று மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் அந்த இடத்திலேயே இறந்தார். (தி)

## 384-வது நாள் நினைவு

ஜனனம் 14 — 01 — 1970



வீரச்சாவு 16 — 06 — 1991

### லெப். கபில்

(மகேஸ்வரலிங்கம் - சசிகரன்)

தமிழீழம் என்னும் தாயகத்தை மீட்க
அமிழ்தான உயிர் தந்த இளங்காளை-எம் கபில்
உம் நினைவில் தோயாத நாளெல்லாம்
எம் வாழ்வில் பிறவா நாளே

ஏழாலை தெற்கு,
சுன்னாகம். (2754)

பெற்றோர்,
உறவினர்.

## அரசாங்க அறிவித்தல்

### சுகாதார சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணம்

இராணுவ நடவடிக்கைகள் காரணமாகத் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையின் ஒரு பகுதி மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் நடைபெற்று வந்தது. அண்மையில் இக்கட்டடம் விமானத்தாக்குதலினால் முற்றாக சேதமடைந்ததன் காரணமாக அங்கு நடைபெற்ற வெளிநோயாளர் பகுதியும் மற்றும் சிகிச்சைப் பிரிவுகளும் இன்று (04-07-1992) தொடக்கம் கந்தரோடை கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் நடைபெறும் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

சிகிச்சை நாட்கள் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| நீரிழிவு சிகிச்சைப் பிரிவு | — | சனிக்கிழமை |
| பொது மருத்துவம் | — | திங்கட்கிழமை |
| சிறுவர் சிகிச்சைப் பிரிவு | — | செவ்வாய் கிழமை |

வைத்திய கலாநிதி. பொ. இரத்தினசபாபதி,
சு. சே. பி. பணிப்பாளர்,
03-07-1992. (சி/4649)

## யாழ். மாநகர தெ.ப.பொ.உ.வி.கூ.சங்கம

நடாத்தும் தையற்கலைப் பொருட்கள்

### கண்காட்சியும் விற்பனையும்

காலம்: 04 07 1992 சனிக்கிழமை
காலை 8-30 - 2-00 மணி வரை

இடம்: சங்கப் பணிமனை,
இல. 330, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

( சி/ 4647 )

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



ஆனையிறவு - போரில் வீரச்சாவடைந்த

### வீரவேங்கை கரிகாலன்
### (மாப்பாணர் உதயகுமார்)

வீரஜனனம் 15 - 11 - 1970 — வீரச்சாவு 15 - 07 - 1991

திதி 04 - 07 - 1992

களத்தினில் வீழ்வதும் வீரமடா - உன்
உளத்தினில் உதித்ததும் தீரமடா - நீ
நிலத்தினில் சிந்தியது உதிரமடா -
- உன் இலட்சியம்
நிட்சயம் ஈழமாய் மலருமடா!

இன்று (04 - 07 - 1992) நடைபெறவிருக்கும், இவ் நினைவஞ்சலி நிகழ்வில் இயக்க உறுப்பினர்கள், நண்பர்கள், உறவினர்கள் யாவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்,
உறவினர்கள்,
நண்பர்கள்,

உதயகுமார் கரிகாலன் வீதி
ஆவரங்கால் கிழக்கு
புத்தூர்

[2750]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை கோபு
### (வெற்றிவேல் வசந்தன்)

தாயின் மடியில் 29.12.74 — தாயகமீட்பில் 16.07.91

திதி: 04. 07. 92

களம் பல காணும் மணளாற்று
மண்ணில் வீர வரலாற்றை பதிந்தாயே என்மைந்தா
உன் நினைவாக

தந்தை, தாய், சகோதரர்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

சிவன்கோவில் றோட்
வசந்தன் வீதி,
பருத்தித்துறை.


(2756)



2-ம் லெப்.
கலைவாணன்



வீரவேங்கை சேனன்



வீரவேங்கை
அன்புமாறன்



வீரப்பிறப்பு 29.12.1967 — வீரச்சாவு 3.07.1990

### மேஜர் பவான்
### (சாந்தலிங்கம் - நாகேந்திரராசா)

இளிவெட்டி - மூதூர் - தருமலை

திருமலை ஈன்ற எம்மையவன்
எங்கள் மேஜர் - பவான்
சருகென எதிரியைச் சாக்களம் போக்கியே
சாய்ந்தனன்! நெஞ்செலாம் நிறைந்தனன் - அவன்
கொட்டிய குருதிச்சாற்றினில் இம்மண்-கொதித்தது
குளித்தது! குவிப்பால் விழித்தது!
எட்டி நடந்திட எழுந்திடுவீர் இவன்
இலட்சியப் பயணம் தொடருவோம்

குடும்பத்தினர்
நண்பர்கள்

(4650)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

03 07. 1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 4693

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-

41-9895, 40-1737, 28-7560, 26-6842, 24 5676, 42-7032, 42-4927, 36-4009, 25-1485 25-8250, 35-5142.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-

41-9175 24-9606 26-3068, 24-3906 28-8177 28-4672 24-8364 26 5206 26 4683, 24 9875, 26 3632 24-1205 25-6682 27-1494 40-9188, 28 1799 41-7693 43-517 42-1320, 28-6835, 28-6546, 26-6511 ,27 8503, 36-8158 25-1025,